# சங்க இலக்கியங்களில் கடற்கரைப் புனைவு

**முனைவர் த. ஆதித்தன்**
*இணைப் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை*
*தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

**ஆய்வுச் சுருக்கம்**

*மக்களினம் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து வாழ்வதற்குத் தொழிலும், வாழும் இடமும் சங்க காலத்தில் முக்கிய பங்காற்றியுள்ளன, எனவே தான் நம் முன்னோர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பாகுபாட்டினை வகுத்துள்ளனர். இவற்றுள் நெய்தல் நிலம் சார்ந்த கடற்கரைப்புனைவு சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பாங்கினை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது. மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டனவாகச் சங்க இலக்கியங்கள் திகழ்வதையும் சங்கப் பாடல்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. தலைமை மாந்தர்களின் ஒழுக்கம், அக்கால மக்களின் வாழ்வியல் கூறு போன்றவற்றையும் இப்பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் நெய்தல் திணைப்பாடல்கள் கடற்கரைச் சார்ந்து வாழும் மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன எனலாம்,*

***முதன்மைச் சொற்கள்**: நெய்தல், ஐந்திணை, உப்பளம், கருவாடு, உப்புவணிகர், கடற்கரைப்புனைவு*

**முன்னுரை**

விலங்குகளோடு காடுகளில் வாழ்ந்த மனிதன் தனது நாகரிக வளர்ச்சியின் விளைவாகத் தனக்கென ஓர் இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டான். அதுவே மக்கள் நிலம் சார்ந்து சேர்ந்து வாழ்வதற்கு முன்னோடி எனலாம்.

மனிதன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறிவைப் பெருக்கிக் கொண்டதன் மூலம் பல முன்னேற்றங்களை அடைந்தான். நாகரிக வளர்ச்சியும் பெற்றான். அவன் நிலம் சார்ந்து அமைத்துக் கொண்ட வாழ்க்கை முறையும், வாழ்க்கைச் சூழலும் அன்று முதல் இன்றுவரை இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மனிதன் நாகரிகம் அடைவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே கூடிவாழும் இயல்புடையவனாய் இருந்துள்ளான். இக்கூடி வாழும் இயல்பினால் விளைந்த நன்மைகள் பல. மக்களினம் பல கிளைகளாக வளர்ச்சி அடைவதற்கும் அது வழிவகுத்தது. மனித இனம் பல்வேறு குழுக்களாகப் பிரிவதற்குப் பேசும் மொழி, செய்யும் தொழில் போன்று வாழும் இடமும் முக்கியப் பங்காற்றுகிறது. அதனைக் கருத்தில் கொண்டுதான் முன்னோர் நிலப்பாகுபாட்டினை வகுத்துள்ளனர் போலும். அவற்றுள் நெய்தல் நிலத்திற்குரிய கடற்கரை சங்க இலக்கியங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை எடுத்துரைப்பதாகக் இக்கட்டுரை அமைகிறது.

**நிலப்பாகுபாடு**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பாகுபாட்டினை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். இவற்றுள் பாலை என்பது குறிஞ்சியும், முல்லையும் முறைமையில் திரிந்ததே என்பதால் பாலைக்கெனத் தனிநிலம் இல்லை எனலாம். இதனை,

> **“முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
> **நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
> **பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”**

**(சிலப்பதிகாரம், காடுகாண் காதை, அடி:64-66)**

என்று சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கிறது.

தொல்காப்பியம்,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”**

**(தொல், அகத்திணை இயல், நூற்பா:951)**

என்று இந் நிலப்பாகுபாடுகளைப் பற்றிக் கூறுகிறது. இவற்றுள் ‘வருணன் மேய பெருமணல் உலகமும்’ என்னும் அடி நெய்தல் நிலத்திற்குரிய கடவுள் வருணன் என்பதையும், பெருமணல் மிகுந்த கடற்கரை நிலம் நெய்தல் என்பதையும் கூறுகிறது.

**கடற்கரைப் புனைவு**

இலக்கியங்கள் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும். கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலத்திற்கு ஏற்ற நிகழ்வுகளும் அவ்வகையில் இலக்கியங்களுள் இடம் பெற்றுள்ளன. இந்நெய்தல் நிலம் தொடர்பான வர்ணனைகளை ஏராளமாகச் சங்க இலக்கியப் பாடல்களில் காண முடியும். உதாரணமாக,

**“பெருநீர் அழுவத்து எந்தை தந்த**
**கொழு மீன் உணங்கற் படு புள் ஓப்பி**
**எக்கர்ப் புன்னை இன்நிழல் அசைஇ,**
**செக்கர் ஞெண்டின் குண்டு அளை கெண்டி**
**ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங் கழித்**
**தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி,**
**கொண்டல் இடு மணல் குரவை முனையின்**
**வெண் தலைப் புணரி ஆயமொடு ஆடி,**
**மணிப் பூம் பைந் தழை தைஇ, அணித்தகப்**
**பல் பூங்கானல் அல்கினம் வருதல்**
**கவ்வை நல் அணங்கு உற்ற, இவ்ஊர்,**
**கொடிது அறிபெண்டிர் சொற்கொண்டு, அன்னை**
**கடி கொண்டனளே-தோழி!-பெருந்துறை,**
**எல்லையும் இரவும் என்னாது, கல்லென**
**வலவன் ஆய்ந்த வண்பரி**
**நிலவு மணல் கொட்கும் ஓர் தேர் உண்டு எனவே”**

**(அகநானூறு, பாடல்:20)**

என்னும் அகநானூற்றுப் பாடலைக் காணலாம்.

தோழி தலைவியிடம் கூறும் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியோடு களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் ஒருநாள் பகலில் சிறைப்புறமாக வந்து நிற்கிறான். அதனைக் கண்ட தோழி அவன் வந்துள்ளதை அறியாதது போல் காட்டிக் கொள்கிறாள். அலர் தூற்றும் ஊர்ப் பெண்களின் சொல்லினைக் கேட்டுத் தாய் தலைவியை வீட்டினுள் காவற்படுத்தியதைத் தலைவனுக்கு உணர்த்த விரும்புகிறாள். எனவே தலைவனுக்குக் கேட்கும் வகையில் தலைவியிடம் கூறுவது போல இப்பாடலின் செய்திகளைத் தோழி கூறுகிறாள்.

தந்தை கொண்டு வரும் கொழுப்பு நிறைந்த மீன்களை உலர வைத்துக் கருவாடாக்குவது உண்டு. அவ்வாறு மாற்றுவதற்காக மீன்களை உலரவைத்துக் காய வைப்பர். அப்போது அதன் மீது வந்து விழுகின்ற பறவைகளை விரட்டுவதற்காகத் தோழியும்

தலைவியும் கடற்கரை மணல் மேட்டில் உள்ள புன்னை மரங்களின் நிழல்களில் அமர்ந்திருப்பர். அதனைத் தலைவியிடம் நினைவு கூர்ந்த தோழி தொடர்ந்து அவளிடம் பின்வருமாறு கூறுகிறாள்.

கடற்கரையில் சிவந்த நண்டின் ஆழமான வளைகளை அகழ்ந்து எடுத்தோம். உப்பங் கழிகளில் உள்ள தாழையின் விழுதுகளைக் கயிறாகப் பயன்படுத்தி ஞாழல் மரங்களின் உயர்ந்த கிளைகளில் ஊசல் ஆடினோம். காற்றுக் கொண்டு வந்து குவித்த மணலில் குரவைக் கூத்தாடினோம். இவையெல்லாம் வெறுப்பை உண்டாக்கினால் வெண்மையான மேற்பகுதியைக் கொண்ட அலைகள் வீசும் கடலில் தோழியருடன் விளையாடினோம். அழகிய மலர்களாலான பசிய தழையாடையை அழகுடன் உடுத்திக் கொண்டோம். பூக்கள் பல நிறைந்த கடற்கரைச் சோலையில் தலைவனைச் சந்தித்து வந்தோம்.

இவ்வாறு தலைவனைச் சந்திப்பதைப் பற்றி, அவர் கூறுவதையும், பேய் பிடித்த பெண்கள் கூறுவனவற்றையும் நம் தாய் கேட்டு விட்டாள். அதனால் இரவு பகல் என்று இல்லாமல் குதிரைகள் பூட்டப்பட்ட கல் என்னும் ஓசையுடன் கடற்கரைக்கு வந்து செல்லும் தேரைப் பற்றி எண்ணியவளாய் நம்மை வீட்டுக் காவலில் வைத்துவிட்டாள். நாம் என்ன செய்ய முடியும் என்று தோழி கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில் கடற்கரைக் குறித்த புனைவு மிக அழகுடன் அமைந்துள்ளது. கடற்கரையில் மீன்களைக் கருவாடாக்குவதற்காகக் காய வைப்பது, உப்பங்கழியும் அதன் அருகில் உள்ள தாழை, ஞாழல் மரம் போன்றவற்றைப் பற்றிய குறிப்புப் போன்றவை மிக எதார்த்தமானவை ஆகும். கடற்கரையில் காணப்படும் மணல் மேட்டையும் இப்பாடலின் ஆசிரியர் உலோச்சனார் காட்சிப்படுத்தத் தவறவில்லை.

**“உவர் விளை உப்பின் உழாஅ உழவர்**
**ஒழுகை உமணர் வருபதம் நோக்கி**
**கானல் இட்ட காவற் குப்பை,**
**புலவு மீன் உணங்கல் படுபுள் ஒப்பி,**
**மட நோக்கு ஆயமொடு உடன் ஊர்பு ஏறி,**
**‘எந்தை திமில், இது, நுந்தை திமில்’ என**
**வளை நீர் வேட்டம் போகிய இளைஞர்**
**திண் திமில் எண்ணும் தண் கடற் சேர்ப்ப!**
**இனிதே தெய்ய, எம் முனிபு இல் நல் ஊர்**
**இனி, வரின் தவறும் இல்லை எனையதூஉம்**
**பிறர் பிறர் அறிதல் யாவது**
**தமர் தமர் அறியாச் சேரியும் உடைத்தே”.**

**(நற்றினை, பாடல் :331)**

என்னும் நெய்தல் திணையில் அமைந்த நற்றிணைப் பாடலும் கடற்கரைப் பகுதி குறித்து எடுத்துரைக்கிறது.

கடற்கரையில் உப்பளங்கள் காணப்படும். அதனை உழாது விளைவிக்கும் நெய்தல் நில மக்களால் உவர் நிலத்தில் விளைவிக்கும் உப்பு என்று கூறியுள்ளது அருமை. அந்த உப்புகளை உப்பு வணிகர் வருகின்ற காலம் வரை கடற்கரையில் குவித்து வைத்திருப்பார்களாம்.

அங்கு, புலால் மணம் பொருந்திய மீனை உப்பிட்டுக் கருவாடாக்குவதற்குக் காய வைத்திருப்பர். அவற்றைக் கொள்வதற்காக வந்து வீழும் பறவைகளை மடநோக்கு உடைய பெண்கள் தோழிகளோடு சேர்ந்து விரட்டுவர். அவர்கள் குவித்து வைத்துள்ள உப்புக் குவியல் மீதேறி எம் தந்தையின் படகு இது, உம் தந்தையின் படகு அது எனக் கடலுள் மீன் பிடிக்கச் சென்றிருக்கும் படகுகள் குறித்துக் கூறுவர் என்று கடற்கரை நிகழ்வுகளை மிகச் சிறப்பாகக் காட்சிப்படுத்தியுள்ளது இப்பாடல். இதே போன்ற நெய்தல் சார்ந்த பாடல்கள் பல

சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. கட்டுரையின் அளவுக் கருதி இருபாடல்கள் மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**முடிவுரை**

சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் இதே போன்ற கடற்கரைப் புனைவுகள் பல இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சங்க இலக்கியங்களில் இடம் பெறும் நெய்தல் பாடல்கள் சொல்வன்மை மிக்கனவாக உள்ளன. திணைக்குரிய பொருள் வெளிப்பாடுகளும் சிறப்பாக அமைந்துள்ளன. கடற்கரைப் புனைவுகள் தேவையற்ற வர்ணனை இன்றி இயல்பான காட்சி வர்ணனைகளாக அமைக்கப்பட்டிருப்பதையும் இப்பாடல்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. முக்கியமாக அக்கால நெய்தல் திணை மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைப்பனவாக இப்பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

**தொகுப்புரை**

1. ஐவகை நிலப்பாகுபாட்டினை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.
2. பெருமணல் மிகுந்த கடற்கரை நிலம் நெய்தல். அந்நிலத்திற்குரிய கடவுள் வருணன்.
3. கடலும், கடல் சார்ந்த நிலமாகிய நெய்தல் நிலத்திற்கு ஏற்ற நிகழ்வுகள் இத்திணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.
4. மீன்களைக் கருவாடாக்குவது, கடற்கரையின் உப்பங்கழி அதன் அருகே உள்ள தாழை, ஞாழல் மரம் போன்ற குறிப்புகள் உலோச்சானர் பாடலில் மிக எதார்த்தமாகக் காட்டப்பட்டுள்ளன.
5. கடற்கரையில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் கூறுகள், கடற்கரை நிகழ்வுகள் நயம்பட காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**துணை நின்ற நூல்கள்**

1. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098, மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி-2007
2. சிலப்பதிகாரம், டாக்டர் உ.வே.சா. பதிப்பு, டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், 2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசண்ட் நகர், சென்னை-600090, பதிமூன்றாம் பதிப்பு, 2018
3. தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108, பதிமூன்றாம் பதிப்பு, அக்டோபர்-2010
4. நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098, மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி-2007.